DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 25/2024 | Addl.W 1 | PW– 4 | |
| Name | : பொன் குணசேகரன் (காவல் ஆய்வாளர்) | | |
| Father's/Husband's Name | : நீராத்திலிங்கம் | | |
| Village | : நத்தம் காவல் நிலையம் | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 44/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of December 2025

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(மனு எண். 1942/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு.குபேந்திரன் என்பவர் பணி ஓய்வு பெற்று அவரது சொந்த ஊரான உசிலம்பட்டியில் வசித்து வருவதாலும், வயது முதிர்வின் காரணமாக நினைவாற்றலை இழந்து உள்ளதாலும் அவருக்காக தற்போது நத்தம் காவல் நிலையத்தில் பணியில் இருக்கும் என்னை வழக்கு கோப்புகளை பார்த்து சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.02.2006ம் தேதி காவல் ஆய்வாளர் திரு.குபேந்திரன் என்பவர் நத்தம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது நத்தம் காவல் நிலையக் குற்ற எண்.330/2000 சட்டப் பிரிவுகள் 468, 482 இ.த.ச. மற்றும் 4(1)(a), 4(1–A)(C)(1)(a) TNP Actன்

படியான வழக்கு கோப்பை அவருக்கு முன்பாக பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் முதல் விசாரணை முடித்து பணி மாறுதலாகி சென்றதால் காவல் ஆய்வாளர் திரு.குபேந்திரன் என்பவர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை காவல் ஆய்வாளர் திரு.குபேந்திரன் என்பவர் விசாரித்தபோது அவர்கள் ஏற்கனவே சொன்னது போல் அவரிடமும் சொன்னதால் அவர் மீண்டும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. காவல் ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்கள் கடந்த 09.07.2000 அன்று 16.30 மணிக்கு சாட்சிகள் செல்வமாறன் (V.A.O) மற்றும் பொம்மாணி (தலையாரி) ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரி சிவஞானம் என்பவரை விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். **(எதிரி சிவஞானம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. அதன் தொடர்ச்சியாக அன்றைய தினம் மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள மேலப்பெருமாள் தெருவில் உள்ள கடை எண்.33 ல் அருப்புக்கோட்டை கூட்டுறவு சொசைட்டி ஒயின்ஸ் கடையில் வைத்து 180 ML அளவுள்ள மானிட்டர் கிறிஸ்டி பாட்டில் 12 யும், ஓல்டு மங்க் ரம் பாட்டில் 180 ML அளவுள்ள பாட்டில்கள் 2 யும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **(சிவஞானம் என்பவர் மூலம் கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியை தக்க வழிக் காவல் மூலம் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பியும் வழக்கு சொத்துக்களை படிவம் 91

மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். (**படிவம் 91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. 10.07.2000 ம் தேதி காலை 9.00 மணிக்கு மதுரை கோவில்பட்டியைச் சேர்ந்த லெட்சுமண பெருமாள் என்பவரை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் பாண்டி மற்றும் அப்பாஸ் ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்தபோது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். **(எதிரி லெட்சுமண பெருமாள் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதன் தொடர்ச்சியாக அன்றைய தினம் பகல் 12.30 மணிக்கு மதுரையில் உள்ள எதிரி லெட்சுமண பெருமாள் வீட்டின் முன்பு வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் 180 ML அளவுள்ள மானிட்டர் விஸ்கி பாட்டில்கள் லேபிளுடன் கூடியது –2 மற்றும் 180 ML அளவுள்ள ஓல்டு மங்க் ரம் பாட்டில்கள் லேபிளுடன் கூடியது –2 ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **(லெட்சுமணப் பெருமாள் என்பவர் மூலம் கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. பின்னர் வழக்கு சொத்துக்களை காவல் ஆய்வாளர் திரு.குபேந்திரன் என்பவர் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். தற்போது வழக்கு சொத்துக்களை நத்தம் காவல் நிலையத்திலிருந்து இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் R.P.R.No.104/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதில் கண்ட 180 ML அளவுள்ள மானிட்டர் விஸ்கி பாட்டில்கள் –12 (லேபிளுடன் கூடியது 8) மற்றும் 180 ML அளவுள்ள ஓல்டு மங்க் XXX ரம் பாட்டில்கள் –2 ஆக மொத்தம் 14 பாட்டில்கள் <u>**அ.சா.பொ.1**</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன சட்டப் பிரிவுகளின் கீழ் 20.02.2006 ம் தேதியில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

6. எனக்கு எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையின்படி இவ்வழக்கின் எதிரி இரண்டாம் எதிரியாக உள்ளார் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையின் படி 3ம் எதிரியிடமிருந்து தமிழ்நாடு ஆயத்தீர்வை லேபிள்கள் ஒட்டப்பட்ட அயல்நாட்டு மதுவை இந்திய தயாரிப்பு போன்று போலி மதுபான பாட்டில்கள் தயார் செய்த 3ம் எதிரியிடமிருந்து ஆஜர் எதிரி பெற்று 1வது எதிரிக்கு விற்பனை செய்து ஆதாயம் அடைந்ததாகதான் ஆஜர் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதில் மதுபானங்களில் விஷத்தன்மை மற்றும் நச்சுத்தன்மை இல்லை என்று சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. 3ம் எதிரி போலி லேபிள்களை எவ்வாறு தயார் செய்தார் என்பதற்கு தயார் செய்ய பயன்படுத்தப்பட்ட மிஷின் மற்றும் கருவிகளை கைப்பற்றவில்லை என்றாலும், எந்த இடத்தில் யாருடைய உதவியுடன் தயார் செய்தார் என்பதும் புலன் விசாரணையில் தெரிய வரவில்லை என்றால் சரியல்ல. 3ம் எதிரி மேற்படி விபரங்களை தெரிவிக்க மறுத்துவிட்டார் என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் அருப்புக்கோட்டை அரசு கூட்டுறவு மதுபானக் கடையில் வைத்து வழக்கு சொத்துகள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் அந்த கடையின் அனுமதி பெற்ற உரிமையாளரை எதிரியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

8. அரசு மதுபான கடையில் ஓல்டு மங்க், ரம், மானிட்டர் விஸ்கி ஆகியவை தற்போது வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளில் உள்ள லேபிள் போலியாக தயார் செய்யப்பட்டது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்றாலும், அது போலி மதுபானங்கள் இல்லையென்றாலும் சரியல்ல. போலி மதுபானங்கள்

என்பது புலன் விசாரணையில் சரிவர துலங்கவில்லை என்றால் சரியல்ல. போலி மதுபானங்களோ, போலி லேபிள் ஆகியவை ஆஜர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் மற்றும் அத்தாட்சி, சாட்சிகள் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.12.18 16:13:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்